# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# &
## இந்திய வானிலைத்துறை
## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை
## ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
## (21.10.2023 முதல் 25.10.2023)

**அறிக்கைஎண் 084/2023** **தேதி.20.10.2023**

### மாநிலத்தின் கடந்தவார வானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 26°செ ஆகவும், கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 22°செ ஆகவும், இரவுநேரவெப்பநிலை 9°செ முதல் 14°செ ஆகவும் பதிவானது. தமிழகத்தில் ஆங்காங்கே பரவலாக மழை பெறப்பட்டது.

### ஈரோடு மாவட்டத்தின் கடந்தவார வானிலை

ஈரோடு மாவட்டத்தின் மாவட்டத்தின் 17.10.23 முதல் 19.10.23 வரையிலும் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் ஆகவும், 33°செ இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 24°செ ஆகவும் காலைநேர காற்றின் ஈரப்பதம் 91 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 44 சதவிகிதமாகவும் பதிவானது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 7-10 கி.மீ வேகத்தில், பெரும்பாலும் கிழக்கு திசையிலிருந்து தென் கிழக்குதிசைவரை பதிவானது.

### ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்தவார வானிலை (17.10.2023 முதல் 19.10.2023) | | | | அடுத்தஐந்துநாட்களுக்கானவானிலை முன்னறிவிப்பு 25.10.2023- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 17/10 | 18/10 | 19/10 | தேதி | நாள்-1 21/10 | நாள்-2 22/10 | நாள்-3 23/10 | நாள்-4 24/10 | நாள்-5 25/10 |
| 14.8 | 2.7 | 0.0 | மழை (மி.மீ) | 3 | 2 | 10 | 15 | 45 |
| 31 | 33 | 33 | அதிக பட்ச வெப்பநிலை (°செ) | 33 | 33 | 33 | 32 | 32 |
| 21 | 24 | 23 | குறைந்த பட்ச வெப்பநிலை (°செ) | 23 | 23 | 23 | 22 | 22 |
| 4 | 7 | 6 | மேக மூட்டம் (ஆக்டர்) | 6 | 6 | 6 | 5 | 5 |
| 91 | 86 | 70 | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | 84 | 84 | 84 | 82 | 82 |
| 50 | 47 | 44 | குறைந்தபட்சகாற்றின்ஈரப்பதம் (%) | 50 | 50 | 50 | 48 | 48 |
| 7 | 10 | 9 | காற்றின் வேகம் (கி.மீ/மணி) | 10 | 10 | 10 | 8 | 8 |
| 90 | 90 | 70 | காற்றுவீசும் திசை | 70 | 70 | 70 | 90 | 90 |

### எதிர்பார்க்கப்படும் வானிலை ஈரோடு (21.10.2023 முதல் 25.10.2023)

வரும் நாட்களில்வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 84 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 48 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 8-10 கி.மீ வேகத்தில் வீசக்கூடும், காற்று பெரும்பாலும் வடகிழக்கு திசையிலிருந்து

| ஈரோடு மாவட்டத்தில் உள்ள தொகுதிவாரியாக உள்ள அடுத்த ஐந்து நாட்களுக்கான மழையளவு | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேதி | அம்மாபெட் | அந்தியூர் | பவானி | பவானிசாகர் | சென்னிமலை | ஈரோடு | கோபி | கொடுமுடி | மொடக்குறிச்சி | நம்பியூர் | பெருந்துறை | சத்தியமங்கலம் | தாளவாடி | டி.என்.பாளையம் |
| **21-10-2023** | 2.0 | 2.0 | 1.0 | 4.0 | 3.0 | 1.0 | 3.0 | 2.0 | 1.0 | 5.0 | 2.0 | 4.0 | 0.0 | 3.0 |
| **22-10-2023** | 2.0 | 2.0 | 0.0 | 4.0 | 3.0 | 0.0 | 3.0 | 3.0 | 1.0 | 5.0 | 2.0 | 4.0 | 0.0 | 3.0 |
| **23-10-2023** | 7.0 | 7.0 | 8.0 | 8.0 | 8.0 | 8.0 | 7.0 | 9.0 | 8.0 | 8.0 | 8.0 | 7.0 | 2.0 | 7.0 |
| **24-10-2023** | 11.0 | 12.0 | 12.0 | 21.0 | 13.0 | 12.0 | 13.0 | 11.0 | 12.0 | 14.0 | 13.0 | 16.0 | 7.0 | 15.0 |
| **25-10-2023** | 39.0 | 39.0 | 41.0 | 36.0 | 40.0 | 42.0 | 38.0 | 39.0 | 41.0 | 37.0 | 41.0 | 35.0 | 17.0 | 36.0 |

**வேளாண் அறிவுரைகள்**

| | | |
|---|---|---|
| பொது அறிவுரை | | வடகிழக்கு பருவமழை வரும் வாரத்தில் எதிர்பார்க்கப்படுகிறது. ஆதலால் வரும் நாட்களில் மேற்கு மண்டல பகுதிகளில் மிதமான மழையுடன் மணிக்கு 8-10 கி.மீ வரை வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுகிறது.<br>மேற்குத்தொடர்ச்சி மலையினை ஒட்டியுள்ள பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளதால் போதிய வடிகால் வசதி மேற்கொள்ளவும். அதிகப்படியான மழைநீரினை பண்ணைக்குட்டைகளில் சேமிக்கவும்.<br>எதிர்பார்க்கப்படும் மழையினைப் பயன்படுத்தி மானாவாரி பயிர்களில் பாடுவாசி விதைத்தல் மற்றும் களைதலின் மூலம் பயிர் எண்ணிக்கையினைப் பராமரிக்கலாம். |
| உளுந்து | வளர்பருவம் | இறவையில் விதைக்கப்பட்ட பச்சைப்பயறு மற்றும் உளுந்து பயிர்களில் மண்ணிலுள்ள அதிக ஈரத்தன்மையால் கொடிகிளைகள் வளர வாய்ப்புள்ளது. கிளைகளை வெட்டிவிடவும். |
| கரும்பு | வளர்பருவம் | மழையுடன் வேகமான காற்றும் எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களுக்கு மேலான கரும்பில் தோகை உரித்து விட்டம் கட்டவும். |

| | | |
|---|---|---|
| பருத்தி | பூக்கும் பருவம் | நிலவும் வானிலையால் பருத்தியில் பேக்டீரியா இலைப்புள்ளி நோய் வர வாய்ப்புள்ளது. எனவே விவசாயிகள் இதை கண்காணித்து தேவைப்பட்டால் ஒரு எக்டருக்கு ஸ்டெரெப்டோமைசின் சல்பேட் + டெட்ராசைக்கிளின் கலந்த கலவை 100 கிராம் + காப்பர் ஆக்ஸிகுளோரைடு 1200 கிராம் கலந்து தெளிக்கவும். |
| கொடி வகை காய்கறிகள் | பூக்கும் பருவம் | தொடர் மழையால் பூக்கும் பருவத்தில் உள்ள கொடி வகை காய்கறிகளில் அதிக தழை வளர்ச்சி காணப்படும். இதனால் பூ பிடித்தலை அதிகரிக்க எத்திரல் என்ற வளர்ச்சி ஊக்கியை பீர்க்கங்காய்க்கு 200 பி.பி.எம் என்ற அளவிலும் மற்ற எல்லா கொடி வகைப் பயிர்களுக்கும் 100 பி.பி.எம் என்ற அளவிலும் தெளிக்கவும். |
| வாழை | 5 மாதத்திற்கு மேல் | மணிக்கு 8-10 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப் படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும். |
| பப்பாளி | | தொடர் மழையின் காரணமாக பப்பாளி மரத்தில் வேர் அழுகல் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே தக்க வடிகால் வசதி செய்து 1 சத போர்டோ கலவையை வேர் நனையும்படி ஊற்றவும். |
| மஞ்சள் | கிழங்கு பருக்கும் பருவம் | நிலவும் வானிலையால் மஞ்சளில் இலைக்கருகல் நோய் வர வாய்ப்புள்ளது. எனவே இதை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீரில் காப்பர் ஆக்ஸிகுளோரைடு 2 கிராம் என்ற அளவில் மழையில்லாத நாட்களில் கலந்து தெளிக்கவும். |
| கால்நடை | | மழை எதிர்பார்க்கப்படுவதால் கோழி மற்றும் மாட்டு கூடங்களில் அருகில் தண்ணீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளவும். மேலும் தீவனம் நனையாமல் பாதுகாப்பாக எடுத்து வைக்கவும்.<br>வரும் நாட்களில் மழையுடன் அதிக காலை மற்றும் மாலை காற்றின் ஈரப்பதம் எதிர்ப்பார்க்கப்படுவதால் மாடுகளுக்கு மற்றும் கோழிகளுக்கு உலர்ந்த தீவனங்கள் கொடுக்கவும். |

## குறுஞ்செய்தி

- மணிக்கு 8-10 கி.மீ வரை வேகமான காற்று எதிர்பார்க்கப் படுவதால் 5 மாதங்களுக்கு மேலான வாழை மரங்களுக்கு தகுந்த முட்டு கொடுக்கவும்.

முதன்மை அலுவலர் (GKMS)